Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ்
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal
ISSN: 3049-0723 (Online)

Vol 1, No. 03 | December 2024

Community life in Pattinapalai

K.Sindhu Ref.No-22097/Ph.D.K8[1], Dr. I.Ravichandran[2]

1. Postdoctoral Researcher (P.N), Department of Tamil Studies National College (Autonomous) Affiliated to Bharathidasan University, Tiruchirappalli – 620 001 Tiruchirappalli – 620 024 Tamil Nadu, India Tel: 93621 44278

2. Associate Professor, Department of Tamil Studies, National College (Autonomous) Affiliated to Bharathidasan University, Tiruchirappalli – 620 001 Tiruchirappalli – 620 024 Tamil Nadu, India Tel: 93621 44278

ABSTRACT

The purpose of this article is to explore the social life portrayed in *Pattinapalai*, one of the Patuppattu, specifically focusing on elements such as: family structure and relationships, the role of trade and commerce, social classes and their interactions, as well as common customs and beliefs. By analyzing these aspects of the text, we aim to reconstruct a comprehensive picture of the social landscape depicted within..

ARTICLE INFO

Received : 01 Dec 2024
Revised : 04 Dec 2024
Accepted : 01 Jan 2024

KEYWORDS

Tamil Lierature, Pattinappalai, Community

பட்டினப்பாலையில் சமுதாய வாழ்வுகள்

கு.சிந்து Ref.No-22097/Ph.D.K8[1], முனைவர் இரா.இரவிச்சந்திரன்[2]

1. *முனைவர்பட்ட ஆய்வாளர் (ப.நே), தமிழாய்வுத்துறை தேசியக்கல்லூரி (தன்னாட்சி) பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுபெற்றது, திருச்சிராப்பள்ளி - 620 001 திருச்சிராப்பள்ளி - 620 024 தமிழ்நாடு, இந்தியா அலைபேசி :93621 44278*
2. *இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி) பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுபெற்றது, திருச்சிராப்பள்ளி - 620 001 திருச்சிராப்பள்ளி - 620 024 தமிழ்நாடு, இந்தியா அலைபேசி :93621 44278*

ஆய்வுச் சுருக்கம்

பத்துப்பாட்டுள் ஒன்றான பட்டினப்பாலையிலுள்ள சமுதாய வாழ்வுகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்”1

என்ற அடிகளில் பிறரின் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம் எனக் கலித்தொகையால் அறியப்படுகிறது. ‘பாடு’ என்பது ‘துன்பம்’ என்ற பொருளாலேயே தெரிவு செய்யப்படுகிறது. மிகப்

பெரிய பஞ்சம் ஏற்பட்டாலும் கோள்கள் தம் நிலையிலிருந்து மாறுபட்டாலும் காவிரியாற்று நீர் பயிர்களுக்கு உணவாகவும், மனிதர்களுக்கு அரு மருந்தாகவும் இருந்து உயிர்களை வாழ வைக்கிறது. காவிரிபூம்பட்டினம் பகையறியாப் பெரு வாழ்வைக் கொண்டுள்ளது. பட்டினத்து சுங்கத்தார்கள் சூரியனின் எழுச்சிப்போல சுறுசுறுப்பாகத் தங்கள் கடமையாற்றுபவர்களாகத் திகழ்கின்றனர். நன்மையும், தீமையும் ஒருவனுக்குப் பிறரால் ஏற்படுவதில்லை.

தனிமனிதனுடைய செயல்களாலும், எண்ணங்களாலும் தீர்மானிக்கப்படுகின்றன. தங்களுடைய தொழிலையும், அதனால் வரும் பயனையும் இன்னதெனக் கருதி வாழ்ந்தனர். ஆடம்பரமில்லாது கிடைத்ததை வைத்து வாழக்கூடிய வணிகர்கள் எந்தவித உயர்வு தாழ்வுமின்றி ஒற்றுமையுடன் கூடியிருந்தனர். இவ்வுலகம் பொருளுக்கானது என எண்ணாமல் தலைவியினுடைய உள்ளமே தனக்குக் கிடைத்த பெருஞ்செல்வம் எனப் பொருள்படும் பயணத்தைத் தவிர்த்து ஒருவனுக்கு ஒருத்தி என்ற சிறந்த பண்பாட்டை ஓர் ஆண்மகன் முன்னெடுத்து செல்வதை உணர்வுப் பூர்வமான முறையில் பாலைத்திணையில் பாடியிருப்பது படம் பிடித்து காட்டப்படுள்ளது. இவ்வாறான சிறந்த சமுதாய வாழ்வுகளைக் காண்பதே இக்கட்டுரையின் பயனாகப் பெறுவோம் என்பதில் ஐயமில்லை.

முன்னுரை

நன்மொழியும், செம்மொழியுமாய் இருக்கின்ற தமிழ்மொழியில் இன்றுவரை ஏராளமான இலக்கியங்கள் பெருகியுள்ளன. அவற்றுள் வீடு தழுவியது ‘அகம்’ என்றும் நாடு தழுவியது ‘புறம்’ என்றும் சிறப்பாக அழைக்கப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் மனிதர்களின் இயல்புகளையும், பண்புகளையும் அறிவுறுத்தியும் தமிழ் உலகை இன்றுவரை இன்புறுத்தியும் வருகின்றது என்பதற்கு எந்தவித ஐயப்பாடுமில்லை. அவ்வகையில் பட்டினப்பாலையில் காணக்கிடக்கும் அகப்பண்புகளான ஈகை, கடமையுணர்வு, நடுவுநிலைக் கொண்ட எண்ணம், பிறருக்குத் தீங்கு விளைவிக்காமை, ஒற்றுமையுணர்வு, இறை நம்பிக்கைப் போன்ற பண்புகளை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இதனையே திருவள்ளுவர்,

“எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்

பண்புடைமை என்னும் வழக்கு”[2]

எனும் குறளில் எல்லோரிடத்தும் எளிதில் கண்டு பழகும் நிலையில் இருந்தாலே ‘பண்புடையவர்’ என்று சொல்லப்படுகின்ற எளியப் பண்புகளைப் பலரும் வளர்த்துக் கொள்ள முடியும் என்று வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

பட்டினப்பாலை அறிமுகம்

Copyright (c) 2024 K.Sindhu, Dr. I.Ravichandran (Author) https://tamilmanam.in/journal/

பட்டினப்பாலை கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் இயற்றப்பட்டது. 301 அடிகளைக் கொண்டது. பெரும்பான்மை வஞ்சிப்பாவால் ஆனதால் இந்நூலை ‘வஞ்சிநெடும்பாட்டு’ என்றும் அழைப்பர். நூல் முழுவதும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. ‘செலவழுங்குதல்’ துறையில் அமைந்துள்ளது. பாலைத்திணையைச் சேர்ந்தது. பட்டினத்தைச் சிறப்பித்து பாலைத் திணைப்பாடல் என்பதால் ‘பட்டினப்பாலை’ என்றாயிற்று. இந்நூல் தலைவன் பிரிவுத்துயரைத் தன் நெஞ்சுக்குக் கூறி செலவழுங்கியமையே பாடலின் உட்பொருளாக அமைந்துள்ளது.

வளம் குறையாத காவிரியின் சிறப்புப் பேசப்படுகிறது. பெண்கள் நெல்லை வாசலில் உலர வைக்கும்பொழுது அதனை உண்ண வரும் கோழிகளை விரட்ட, தம் காதிலுள்ள மகரக் குழைகளைக் கழற்றி வீசியுள்ளனர். அதனால் அவ்வூரின் செல்வநிலையை அறியமுடிகிறது. சோறுபோல வீதிகளில் ஓடும் சோற்றின் கஞ்சி நீர், அட்டில் சாலை நம் விருந்தோம்பல் பண்பாட்டின் அடையாளமாகும். முழுமதி நாளில் பரதவர்கள் சுராமீன் கொம்பை நட்டு வழிபடுதல், நடுகல் வழிபாடு, வெறியாடல் போன்றவற்றால் மக்களின் இறையுணர்வு புலப்படுகிறது.

காவிரிபூம்பட்டினத்து வணிகர்களின் நேர்மை, வணிகம், ஏற்றுமதி, இறக்குமதி, திருமாவளவனின் போர்த்திறம் முதலானவையும் அறியப்படுகிறது. ந}ல் முழுவதுமாகப் பூம்பட்டினத்து சிறப்புகள் கூறப்பட்டிருந்தாலும் உருத்திரங்கண்ணனாரின்,

“முட்டா சிறப்பினும் பட்டினும் பெறினும்”

என்ற அடியில் தலைவியின் பிரிவைத் தவிர்த்தமைக்குச் சான்றாய் பாலைத்திணை அமைத்துப் பாடியிருப்பது சிறப்பான அம்சமாகக் கருதப்படுகிறது.

பொய்யாக் காவிரி

“வான் பொய்ப்பினும் தான் பொய்யா”[3]

என்று சிறப்பிக்கப்படும் பெருமை வாய்ந்தது. காவிரி ஆறு ஆகாயத்திலுள்ள வெள்ளிக் கோளானது தான் இருப்பதற்குரிய வடதிசையிலிருந்து தெற்கே சென்றால் மழைப் பொழிவின்றி வறட்சி ஏற்பட்டு உயிர்கள் வருந்தும் மழை நீரை மட்டும் உணவாகக் கொண்ட வானம்பாடிப் பறவை பசியால் வாழும்பொழுது காவிரியானது பொய்க்காமல் குடகு மலையில்

Copyright (c) 2024 K.Sindhu, Dr. I.Ravichandran (Author) https://tamilmanam.in/journal/

தோன்றி கடலில் கலக்கும் தன்மையது. இவ்வாறு நாட்டு மக்கள் அனைவரையும் பசியின்றி வாழ பொய்யக்காமல் தன் தொழிலைச் செய்கிறது காவிரி ஆறு.

“கோள்நிலைத் திரிந்துக் கோடை நீடினும்

தான்நிலைத் திரியாத் தண்டமிழ்ப் பாவை”4

என்ற அடிகளில் கோள்களின் நிலைத் திரிந்தாலும், கோடைக்காலம் நீட்டித்தாலும் தன்னுடைய நிலையினின்று மாறுபடாமல் பொய்க்காத வளமையுடையது காவிரியாறாகும் என்று மணிமேகலை வழி அறியமுடிகிறது.

பகையறியாதப் பெருவாழ்வு

சோழநாட்டு வீட்டு முற்றத்தில் பெண்கள் நெல்லை உலரவைக்கும்பொழுது, அதை உண்ண வரும் கோழிகளைக் காதிலுள்ள குழையைக் கொண்டு விரட்டுவார்கள். அங்குத் தேரில்லாமல் மூன்று சக்கரத்தோடு கையால் செலுத்தும் வண்டியைக் கோலை வைத்துச் சிறுவர்கள் உருட்டுவார்கள். அவ்வண்டியை முன் செல்லவிடாது தடுத்து நிறுத்துவையாகக் கழட்டி எறிந்தக் குழைகள் காணப்படுகின்றன. இதைத் தவிர வேறு பகைகள் காவிரிபூம்பட்டினத்தில் இல்லை என்பதை,

“கழங்குப் பகை அறியா”5

என்ற அடி உணர்த்துகிறது. பகையறியாதப் பூம்பட்டினத்தில் முனிவர்கள் வேள்வியை நடத்தி அதில் நெய் மற்றும் சமித்துகளை இடுவர். இதன் காரணமாகப் புகை ஏற்பாடு அவ்விடத்திலுள்ள குயிலானது இடம்பெயர்த்து புறாக்களுடன் தங்குமாம்.

“ஆவுதி நறும்புகை முனை இக்குயில் தம்

மாயிரும் பெடையோ டிரியல் போகி”6

என்ற அடிகள் மிகப் பெரிய ஒற்றுமையைப் பறவைகளுக்குள் ஏற்படுத்தியுள்ளதைக் காட்டுகிறது. ஒரு இனம் பறவை மற்றொரு இனப்பறவையைத் தன் கூட்டினுள் ஒரு போதும் அனுமதிக்காது. ஆனாலும் காவிரிப்பூம்பட்டினத்தில் பகை அறியாமல் மனிதர்கள் மட்டுமல்ல பறவை இனங்களும் வாழ்ந்துள்ளன என்ற உயர்ந்த பண்பாட்டை அறிய இயலுகிறது.

“மனம் இருந்தால் பறவைக் கூட்டில் மான்கள் வாழலாம்”

என்ற திரைப்படப் பாடலிலும் மனம் என்ற ஒருவன் நல்ல முறையில் பகையில்லாப் பெருவாழ்வை வாழலாம் என்பது பாடலில் புலப்படுகிறது.

கடமையுணர்வு

Copyright (c) 2024 K.Sindhu, Dr. I.Ravichandran (Author) https://tamilmanam.in/journal/

காவிரிப்பூம்பட்டினம் நிறைந்த வளங்களைக் கொண்டது என்பதற்குப் ‘பட்டினம்’ என்ற பெயராலேயே அறிந்துக் கொள்ள முடியும். நாட்டை ஆளும் மன்னனின் செல்வங்களைப் பிறர் கொள்ளையடிக்காதவாறு சுங்கத்தார்கள் அல்லும், பகலும் தங்கள் பணியினைச் செய்தார்கள். கதிரவனிடமுள்ள ஏழு குதிரைகளைப்போல பணியைக் கடனாக இல்லாமல் தங்களுடைய கடமையாக எண்ணி செயல்படும் பண்பினராக விளங்கினர். துறைமுகத்தில் உள்ளப் பொருள்களைக் கப்பலில் ஏற்றுதற்கு முன்பே சோழனுடைய புலி முத்திரையிட்டு சுங்கவரி வசூலித்தனர்.

“உலகு செயக் குறைப்படாது”7

என்ற அடியில் தங்கள் பணியைச் செய்து முடிப்பதில் திறம் வாய்ந்தவர்களாகவும் விளங்கினார்கள். இதனையே புறநானூற்றுப் புலவர் சாத்தந்தையார்,

“………… ஞாயிற்றுக்

கட்டில் நிணக்கும் இழ்சினது கையது”8

சூரியன் மறைவதற்கு முன்பே விரைவாக செயல்படும் தொழிலாளியின் கைப்போல, சோழ நாட்டின் செல்வங்களைக் கொள்ளையடிக்க வரும் பகைவர்களை வீழ்த்துவர்.

சோழநாட்டு சுங்கத்தாரும், சொழ மன்னர்களும் தம் கடமையைச் செய்வதில் சிறப்பாகச் செயல்பட்டனர் என்பதை அறிய முடிகிறது.

வழிபாடுகள்

காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகர்களின் வீதியில் அமைந்துள்ள மாளிகைகள் நெருக்கமாக அமைந்துள்ளன. உயர்ந்த மாடங்களையும், வளைந்தத் திண்ணைகளையும் கொண்டு மேகத்தைத் தழுவுமளவிற்கு உயர்ந்த சாளரங்கள் காணப்படுகின்றன. இங்கு நின்று பெண்கள் வீதியில் நடைபெறும் நிகழ்வுகளைக் கண்டும், வெறியாடல் நடத்தும் முருகனைக் கண்டும் வழிபாடு செய்தனர்.

“செறிதொடி முன்கைக் கூப்பச் செவ்வேள்”9

என்ற அடி பெண்களின் இறையுணர்விற்குச் சான்றாக அமைகின்றது. உயர்ந்த மாடத்திலிருந்து முருகனையும் இன்ன பிற தெய்வங்களையும் வழிபட்டனர் என்பது புலனாகிறது. இல்லறத்தில் மட்டுமல்ல தொழில் செய்யக்கூடிய இடத்திலும் வழிபாடு மேற்கொண்டு பலி அரிசியைத் தூவி நின்றனர்.

“வாலரிசிப் பலி சிதறிப்

பாகு குத்த பசு மெழுகிற்”10

Copyright (c) 2024 K.Sindhu, Dr. I.Ravichandran (Author) https://tamilmanam.in/journal/

என்ற அடிகளில் நெல் முதலான தானியங்கள் இருக்குமிடத்தைத் தூய்மை செய்தும் பலி அரிசி, வெற்றிலைப் பாக்குக் கொண்டு வழிபடுவதிலிருந்து அன்று முதல் இன்று வரை வழிபாடு என்ற ஒன்று மட்டும் தமிழர் நம்பிக்கையில் மாறாத் தன்மையினைக் கொண்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

மேலும், முழுமதி நாளில் கடலுக்குச் செல்லாமல் சுறாவின் கொம்பை நட்டு வழிபாடு செய்தனர். பெண்களும், வணிகர்களும், பரதவர்களும் இறையுணர்வின் உச்சம் கட்ட நம்பிக்கைக் கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பதை மேலுள்ள வழிபாட்டு முறையில் அறியமுடிகிறது.

உயிர்களுக்குத் தீங்கு செய்யாமை

எந்த ஒரு உயிர்களுக்கும் தீங்குச் செய்யாமலும், தீய எண்ணங்கள் இல்லாமலும் காவிரிபூம்பட்டினத்து வணிகர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்குப் பல சான்றுகள் பட்டினப்பாலையில் உள்ளன.

"கொலைக் கடிந்தும், களவு நீக்கியும்"11

மனிதனை மனிதன் உண்டு வாழும் நம் நாட்டில் பயந்து தம் உயிரைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் இன்று இருக்கிறோம். ஆனால் பூம்பட்டினத்தில் கடலிலுள்ள மீன்கள் வலைஞர்களின் வலையைக் கண்டு அச்சம் கொள்ளாமலும் விலங்குகள் மனிதர்களைக் கண்டு அச்சம் நீக்கியும் செருக்குடன் அலைந்தனர் என்தற்கு மேற்கண்ட அடி சான்றாகும்.

"தீதும் நன்றும் பிறர் தரவாரா"12

என்றக் கொள்கையை உடையவர்களாகத் திகழ்ந்தனர். அதனால் உயிர்க்கொலைக் கடிந்தும், களவு நீக்கியும் வாழ்ந்தனர். பசுக்கள், அந்தணர்கள் என அனைவரையும் பாதுகாக்கும் உயர் எண்ணமுடையவர்களாக விளங்கினர்.

"இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை"13

என்ற அடி ஆசாரக்கோவை காட்டும் ஒழுக்கத்தில் ஒன்றாகும். இவ்வாறு பிற உயிர்களுக்கும், மனிதர்களுக்கும் தீங்குச் செய்யாதவர்களாகவும், சிறந்த ஒழுக்கத்தைக் கொண்ட பண்பினராகவும் வாழ்ந்தனர்.

நடுவுநிலையும் நேர்மையும் கொண்டோர்

புகாரில் வாழும் மக்கள் பிறருக்கு நனமை விளையும் புண்ணியச் செயல்களைச் செய்வார்கள். நன்மை செய்ய இயலாதவர்களுக்கு வேண்டுவன கொடுத்து காத்து வந்தார்கள்.

Copyright (c) 2024 K.Sindhu, Dr. I.Ravichandran (Author) https://tamilmanam.in/journal/

சிறப்பாக வாழ்க்கை முறையை கொண்டனர். உழவர்களின் வளைவானக் கலப்பையில் உள்ள நுகத்தடியைப் போல எந்நாளும் நடுவுநிலையோடு வாழ்வை மேற்கொண்டுள்ளனர்.

“நெடுநுகத்து பகல் போல

நடுவு நின்ற நன்னெஞ்சினோர்”14

என்ற அடிகள் நடுவுநிலை தவறாத நல்ல மனதை உடையவர்கள் என்பதைக் காட்டுகிறது.

“கொடியோர் தெறுதலும் செவ்வியோர்க்கு அளித்தலும்”15

என்ற அடி புறநானூற்று புலவர் சாத்தனார் சோழனைப் புகழ்வதாக அமைந்துள்ளது. சோழன் சோம்பலில்லாமல் குற்றவாளிகளைத் தண்டிப்பதாகவும், நடுவுநிலைமை உடைய எண்ணத்தோடு உதவுவதாகவும் புலவர் பாடியுள்ளார். இங்குச் செவ்வியது குணம் கொண்டோனை அரசனும் ஏற்பான் என்பது புலனாகிறது.

நேர்மை

“கொள்வதூஉ மிகைக் கொளாது

கொடுப்பதூ உங்குறைக் கொடாது”16

தங்களுடைய தொழிலை நேர்த்தியான முறையில் செய்தனர். பொருளை விற்கின்றவர்களிடம் அதிகமான பணம் பெற்று குறைவானப் பொருளைக் கொடுக்கும் தீய எண்ணமில்லாதவர்கள். இப்பொருளால் தான் பெறும் பயன் இவ்வளவு என உண்மையைக் கூறும் நடுவுநிலைக் கொண்டவர்களாகக் காவிரிபூம்பட்டினத்து வணிகர்கள் வாழ்ந்துள்ளனர்.

இக்கருத்தைப்போல புறநானூற்றிலும் அரசன் (பாண்டியன்) வேண்டியவர், வேண்டாதவர் எனக் கருதாமல் நீதி வழங்க வேண்டும் என்று புலவர் மருதன் இளநாகனார் கூறினார்.

“நமரென கோல் கொடாது

பிறர் எனக் குணம் கொல்லாது”17

என்ற அடிகளானது வணிகர்கள் நடுவுநிலையும், நேர்மையும் கொண்டவர்களாக விளங்கினர் என்பதை அறியமுடிகிறது.

தலைவனுடைய அன்பு நிறைந்த மனம்

காவிரிபூம்பட்டினத்தில் பரதவர்களும், மீனவர்களும் நிறைந்து காணப்படுகின்றனர். தெய்வம் இங்குக் குடியிருப்பதாலேயே செல்வ செழிப்புடன் இந்நகரம் விளங்குகின்றது என்ற

Copyright (c) 2024 K.Sindhu, Dr. I.Ravichandran (Author) https://tamilmanam.in/journal/

நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இத்துணை வளம்கொண்ட பெரிய நகரமே கிடைக்கப் பெறுவதாயினும் நான் என் தலைவியைப் பிரியமாட்டேன். பொருளுக்கானது இவ்வுலகம் அன்று என தன் மனதைத் தலைவியின்மேல் கொண்டிருந்தான் தலைவன் என்பதை,

“முட்டாச் சிறப்பினும் பட்டினும் பெறினும்

வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய

வாரேன் வாழிய நெஞ்சே”[18]

என்ற அடிகளின் வழி அறியமுடிகிறது. அலைபாயும் நெஞ்சிற்குத் தலைவனே அச்சாணியாகத் திகழ்கிறான். தலைவியின்மேல் கொண்டது உண்மையான காதல் மட்டுமே என அக வாழ்வினுடைய சாராம்சத்தை அழகாக வெளிப்படுத்தியுள்ளது திண்ணம்.

முடிவுரை

காவிரிபூம்பட்டினத்தில் சமுதாய வாழ்வு மக்களிடையே சிறந்திருந்தது என்பதனைக் கட்டுரையின் வழி அறிந்து கொள்ள முடிகிறது. பொய்க்காத காவிரி பகையறியாத வாழ்வு, இறையுணர்வு, நடுவுநிலை, நேர்மை, அன்பு நிறைந்த மனம் என்ற இவையே பட்டினப்பாலை வழி அறியப்படும் சமுதாய வாழ்வுகளாகும். வீடு தழுவிய அகம் சரியாக அமைந்தாலே நாடு தழுவிய புறமெல்லாம் சிறப்பாக அமையும். சிறந்த பண்புகள் பெற்று வாழும் மூதூராகச் சங்க காலத்தில் பட்டினம் விளங்கியுள்ளது என்பதற்கு மேலே கூறப்பட்ட பண்புகளே அடித்தளமாக அமைந்துள்ளன என்பதே இக்கட்டுரையின் பொருண்மையுமாகும்.

தொகுப்புரை

- 301 அடிகளைக் கொண்ட பட்டினப்பாலையில் மக்களின் வாழ்விற்குத் தேவையான அனைத்து பண்புகளைப் பெற்றிருந்தனர் என்பதை அறிய முடிகிறது. பட்டினத்தின் சமுதாய வாழ்வுகள் நிறைந்து காணப்படுகின்றன. பாலை என்பது நிலத்தின் வறட்சியைக் குறிக்காமல் தலைவனுடைய உள்ள செழுமையைக் குறிப்பதை அறியமுடிகிறது.

- பொய்க்காத காவிரியாற்றால் அனைத்து உயிர்களும் துன்பமின்றி இன்பமாக வயிராற உண்டு வாழ்ந்துள்ளது. ஏனெனில் நதிகளே நம் நாட்டின் உயிர் ஆகும்.

- மக்கள் பகையறிதல்லாதப் பெருவாழ்வு வாழ்ந்தனர். செல்வம் மட்டும் பெருமையல்ல. பகையறியாத வாழ்வும் செல்வமாகக் கருதினர்.

- சுங்கத்தார்கள் தம் கடமையை ஆற்றுவதில் வல்லவர்களாகவும், பெண்கள் எந்த உயிர்களுக்கும் தீங்குச் செய்யாமல் நல்லெண்ணம் கொண்டவர்களாகவும் விளங்கினர்.

Copyright (c) 2024 K.Sindhu, Dr. I.Ravichandran (Author) https://tamilmanam.in/journal/

- பரதவர்கள் சுறாவின் கொம்பை நட்டு வழிபாடு மேற்கொண்டும், பெண்கள் இறையுணர்வு கைக்கூப்பி மெய்சிலிர்த்து முருகனை வணங்கினர்.

- உழவர்களின் நுகத்தடியைப்போல நடுவுநிலை தவறாது நேர்மையோடும், ஒளிவு மறைவில்லாமலும் வணிகம் செய்தனர்.

- அன்பு நிறைந்த மனம் கொண்ட தலைவனைக் காவிரிபூம்பட்டினமே கடைத்தாலும் தலைவியின் அன்பு மட்டுமே பெரிதெனக் கருதி பயணத்தைத் தவிர்த்து தன் நெஞ்சை ஆற்றுப்படுத்துவதாக அமைகிறது.

- சோழ நாட்டு வளம் காவிரியின் சிறப்பு, சுங்கத்தாரின் கடமை, கூடி வாழும் வணிகர்கள், கூடி வாழும் வணிகர்கள், நடுவுநிலையும், நேர்மையும் கொண்ட காவிரிபூம்பட்டினத்து மக்கள், பகையறியாத வாழ்க்கை என நூல் முழுமையும் சமுதாய வாழ்வுக் களஞ்சியமாக விளங்குகிறது.

அடிக்குறிப்புகள்

1. தமிழமுதன் (உரையாசிரியர்), கலித்தொகை மூலமும் உரையும், நெய்தல் கலி.16, அ.8,ப.341 சாரதா பதிப்பகம், சென்னை - 14.
2. கௌமாரிஸ்வரி, திருக்குறள் தெளிவுரை, குறள்.991, ராமையா பதிப்பகம், சென்னை -14.
3. முருகேசன் (உரையாசிரியர்), அ.5,பத்துப்பாட்டு மூலமும் உரையும், ப.267, சாரதா பதிப்பகம், சென்னை - 14.
4. புலியூர் கேசிகன் (உரையாசிரியர்), மணிமேகலை மூலமும் உரையும், அடி.2425, ப.3, சாரதா பதிப்பகம், சென்னை -14.
5. முருகேசன் (உரையாசிரியர்), அ.26, பத்துப்பாட்டு மூலமும் உரையும், ப.268, சாரதா பதிப்பகம், சென்னை - 14.
6. மேலது நூல், அடி.55-56, ப.269.
7. மேலது நூல், அ.125, ப.275.
8. பாலையன் (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், ப.225,பா.82, ப.98. சாரதா பதிப்பகம், சென்னை - 14.

Copyright (c) 2024 K.Sindhu, Dr. I.Ravichandran (Author) https://tamilmanam.in/journal/

9. முருகேசன் (உரையாசிரியர்), அ.54, பத்துப்பாட்டு மூலமும் உரையும், ப.276, சாரதா பதிப்பகம், சென்னை - 14.

10. மேலது நூல், அடி.165-166, ப.277

11. மேலது நூல், அடி.199, ப.280

12. பாலையன் (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், ப.195, பா.192, ப.195. சாரதா பதிப்பகம், சென்னை - 14.

13. ஆசிரியர் குழு, ஆசாரக்கோவை மூலமும் உரையம், பா.1, ப.7, சாரதா பதிப்பகம், சென்னை - 14.

14. முருகேசன் (உரையாசிரியர்), அ.206, 207, பத்துப்பாட்டு மூலமும் உரையும், ப.280, சாரதா பதிப்பகம், சென்னை - 14.

15. பாலையன் (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், பா.39, ப.40. சாரதா பதிப்பகம், சென்னை - 14.

16. முருகேசன் (உரையாசிரியர்), அ.210, பத்துப்பாட்டு மூலமும் உரையும், ப.280, சாரதா பதிப்பகம், சென்னை - 14.

17. பாலையன் (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், பா.55, ப.70. சாரதா பதிப்பகம், சென்னை - 14.

18. முருகேசன் (உரையாசிரியர்), அ.218-220, பத்துப்பாட்டு மூலமும் உரையும், ப.281, சாரதா பதிப்பகம், சென்னை - 14.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Copyright (c) 2024 K.Sindhu, Dr. I.Ravichandran (Author)